# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் - 03.08.2026

**முன்னிலை**

**திரு மு. நடேசன், எம்.எஸ்.சி., எல்.எல்.பி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-7237-C-2024**

திரு. A.C.முருகேசன் .. மனுதாரர்

/எதிர்/

The Public Information Officer,
District Forest Office,
Salem Forest Division,
Gandhi Salai,
Salem District - 636 007. .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 20.12.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 23.01.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 31.05.2024 |

*******

**ஆணை**

இவ்வாணையம் 11.06.2026 அன்று பிறப்பித்த உத்தரவைத் தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.பெ.பி.வீராசாமி, உதவியாளர், மாவட்ட வன அலுவலகம், சேலம் வனக்கோட்டம், சேலம் மாவட்டம் அவர்கள் 03.08.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, மனுதாரருக்கு அவர் கோரிய தகவல்களை ந.க.எண்.2838/2024/R2 நாள் 03.08.2026 அன்று ஒப்புகையுடன் கூடிய பதிவுத் தபால் மூலம் அனுப்பியதாகவும், அந்த ஒப்புகை அட்டை பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, அக்கோப்பினை இவ்வாணையத்தின் முன் சமர்ப்பித்ததன் அடிப்படையில் மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டதை இவ்வாணையம் உறுதி செய்து, இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

- ***பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அவசரமான வேறு பணிகள் ஏதுமிருப்பின் பணி மூப்பில் போதிய அளவு அனுபவமுள்ள வேறொரு மூத்த அதிகாரியை விசாரணைக்கு அனுப்ப பொதுத் தகவல் அலுவலர் ஏற்பாடுகள் செய்திருக்க வேண்டும். அவ்வாறு செயல்படாத காரணத்தினால் பொதுத் தகவல் அலுவலர் திரு F.இர்பான் அகமது கண்காணிப்பாளர் மாவட்ட வன அலுவலகம், சேலம் வனக்கோட்டம், சேலம் மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான***

*விளக்கத்தையும் மற்றும் தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, சட்டப்பிரிவு 20(2)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்து பூர்வமான விளக்கத்தையும் பொதுத்தகவல் அலுவலர் இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார். அதனடிப்படையில் பொதுத்தகவல் அலுவலரின் விளக்கங்களை பரிசீலனை செய்ததில், அவ்விளக்கங்களை இவ்வாணையம் ஏற்றுக்கொண்டு, இவ்வழக்கிலிருந்து அவர் விடுவிக்கப்படுகிறார்.*

- *மேற்படி, மனுதாரரின் 20.12.2023 தேதியிட்டு விண்ணப்பித்த தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்களை உரிய காலத்திற்குள் மனுதாரருக்கு முழுமையாக வழங்காமல் மனுதாரரை அலைகழித்த காரணத்தினால், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 19(8)(b)-ன்படி ரூ.10,000-ஐ (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) (வரைவோலையாக) இழப்பீடாக மனுதாரருக்கு வழங்குமாறு சேலம் மாவட்டம், மாவட்ட வன அலுவலகம் என்ற பொது அதிகார அமைப்பிற்கு இவ்வாணையத்தின் வாயிலாக உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், இழப்பீட்டுத் தொகையான ரூ.10,000/- யூனியன் வங்கி வரைவோலையாக மனுதாரருக்கு வழங்கப்பட்டதற்கான இரசீதியின் நகலினையும், பொதுத்தகவல் அலுவலர் இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பித்ததன் அடிப்படையில் மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டதை இவ்வாணையம் உறுதி செய்து, இவ்வழக்கினை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-7237-C-2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
District Forest Office,
Salem Forest Division,
Gandhi Salai,
Salem District - 636 007.

**<u>மனுதாரர் வழக்கு எண். SA-7237-C-2024</u>**
திரு. A.C.முருகேசன்
சூரியூர் பள்ளக்காடு,
சூரியூர்,
குரால்நத்தம் Post,
வீரபாண்டி,
பனைமரத்துப்பட்டி வழி,
சேலம் - 636204
Phone : 9486692422

Copy to: File
VPS /PA-03.08.2026